A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 14 / 2022**

திரு. N. சரவணன்,
S/o. நடராஜன்,
தளுகை முருங்கப்பட்டி அஞ்சல்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம் – 621 012.

………மேல்முறையீட்டாளர்
(திரு. N. சரவணன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./துறையூர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், திருச்சி மெயின் ரோடு,
துறையூர் தாலுக்கா – 621 010.

2. உதவி செயற்பொறியாளர்/இ.கா./கொப்பம்பட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், கொப்பம்பட்டி,
துறையூர் தாலுக்கா – 621 012.

3. உதவி பொறியாளர்/ இ.கா./முருங்கப்பட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/551 TNEB, முருங்கப்பட்டி,
துறையூர் தாலுக்கா – 621 012.

…… எதிர்மனுதாரர்
(திரு P. ஆனந்த் குமார், செயற்பொறியாளர்/இ.கா./துறையூர்
திரு. N. ரவிசந்திரன், உதவி செயற்பொறியாளர்/இ.கா./கொப்பம்பட்டி
திரு. A. விஜய ரதீஷ், உதவி பொறியாளர்/ இ.கா./முருங்கப்பட்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 21-01-2022**

**கேட்புரை நாள்: 30-03-2022**

**ஆணை நாள்: 23-05-2022**

21.01.2022 அன்று பெறப்பட்ட திரு. N. சரவணன், S/o. நடராஜன், தளுகை முருங்கப்பட்டி அஞ்சல், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம் – 621 012 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 14/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 30.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது குடியிருப்பு வீட்டு மனைக்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது குடியிருப்பு வீட்டு மனைக்கு மின் இணைப்பு வழங்குமாறு விண்ணப்பித்ததாகவும் ஆனால் இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் குடியிருப்பு வீடு 33KV உயரழுத்த மின்பாதைக்கு அடியில் உள்ளதால், உரிய மதிப்பீடு கட்டணம் செலுத்தினால் வீட்டு மனைக்கு மேல் செல்லும் 33KV உயரழுத்த மின்பாதை மாற்றியமைக்கப்பட்டு மேல்முறையீட்டாளரின் வீட்டு மனைக்கு மின் இணைப்பு வழங்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 27.11.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம், 22.12.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.12.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>**மன்றத்தின் தீர்ப்பு**</u>:*

*இரு தரப்பு சாட்சிகள் மற்றும் மனுதாரர் குடியிருப்புப்பகுதியின் புகைப்பட நகலை பார்வையிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எதிர்மனுதாரரிடம் மனுதாரர் DCW முறையில் விண்ணப்பம் செலுத்தி அதற்குண்டான பணத்தை செலுத்தும் பட்சத்தில் 33 கி.வோ. மின் பாதையை மாற்றி அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளனவா என விசாரித்தனர். அதற்கு எதிர்மனுதாரர் மின் பாதையை மாற்றி அமைக்க தேவையான இட வசதி தற்போது அப்பகுதியில் இல்லை. அப்பகுதி மிகுந்த இட நெருக்கடி கொண்டதாக உள்ளது என தெரிவித்ததால் இறுதியாக மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் மனுதாரரிடம் ஏற்கனவே தாங்கள் வீட்டு மனையின் அருகில் உயரழுத்த மின்பாதை இருப்பது தெரிந்தும். வாரிய விதிமுறைகளை மீறி அவ்விடத்தில் மின்பாதைக்கு கீழே வீடு கட்டியுள்ளது தவறான ஒன்றாகும். மேலும் தங்கள் கோரிக்கையின் படி மேற்படி 33 கி.வோ மின் பாதையை மாற்றி அமைக்கவும் அல்லது 33 கி.வோ. கேபிள் (UG Cable) மூலம் மின்பாதையை கொண்டு செல்லவும் சாத்திய கூறுகள் இல்லை. எனவே, மின் பாதைக்கு கீழே தாங்கள் கட்டியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க வழிவகை இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 30.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. N. சரவணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. ஆனந்த் குமார், செயற்பொறியாளர்/இ.கா./துறையூர், திரு. N. ரவிசந்திரன், உதவி செயற்பொறியாளர்/இ.கா./கொப்பம்பட்டி மற்றும் திரு. A. விஜய ரதீஷ், உதவி பொறியாளர்/ இ.கா./முருங்கப்பட்டி, திருச்சி மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 06.01.2014 நாளன்று தனது குடியிருப்பு வீட்டுமனைக்கு மின் இணைப்பு கேட்டு மனு செய்து இன்றுவரை தனக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், இது குறித்து பல உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எவ்வித பலனும் ஏற்படவில்லை எனவும், திருச்சி மின்குறைதீர்ப்பு மன்ற தலைவரிடம் முறையீடு செய்யப்பட்டு அவர் மின் இணைப்பு வழங்க வழியில்லை என தீர்ப்பு அளித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 திருச்சி மின்குறை தீர்ப்பு மன்றத்தில் தனது நிலையை முழுமையாக பரிசீலிக்கப்படவில்லை, வீட்டு மின் இணைப்பு கேட்டு மனு செய்கிறோம், 33 KV மின் பாதைக்கு அடியில் உள்ளதால் வழங்க இயலாது என தெரிவித்தனர், மின் பாதையை மாற்றியமைக்க வீட்டு மனை உரிமையாளரே மதிப்பீட்டு தொகையை ரூ.1,23,110/– யை 26.08.2011ல் மின்சார வாரியத்திற்கு செலுத்தி உள்ளார், மின்சார வாரிய அதிகாரிகள் மின் பாதையை மாற்றியமைக்காமல் 07.11.2015 அன்று நான்கு வருடங்களுக்கு பின் பணத்தை வீட்டு மனை உரிமையாளரிடம் திருப்பி கொடுத்துவிட்டதாகவும். இடைப்பட்ட நான்கு வருடக்காலத்தில் மின்சார வாரியம் மின்பாதையை மாற்றி

அமைத்திருந்தால் வேலை மதிப்பீட்டு தொகையும் உயர்ந்திருக்க வாய்ப்பில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது மேல்முறையீட்டினை ஏற்று பணம் பெற்று மின்பாதையை மாற்றியமைக்காமல் நான்கு வருட காலம் கழித்து பணத்தை திருப்பி கொடுத்து நான்கு வருடத்திற்கு பின் கால மதிப்பீட்டிற்கு அதிக தொகையை நிர்ணயித்து மின்பாதையை மாற்றி அமைக்கிறோம் என்று கூறி அதற்கான தொகையை ரூ.3,50,040யை செலுத்த கோரியும் கடிதமும் மின்சார வாரியத்தில் அளிக்கப்பட்டு இப்பொழுது மின்பாதையை மாற்றியமைக்க முடியாது என்றும், இன்றைய மதிப்பீட்டின்படி இத்தொகையை செலுத்த வேண்டுமெனவும், மேலும் மின்பாதையை மாற்றியமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் கூறுவது முரன்பாடாக உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே மின்பாதைக்கு கீழ் 5 அடி செங்குத்து இடைவெளியில் வீடு கட்டியுள்ளதால் தான் பாதை மாற்ற வேண்டி பணம் செலுத்தி மின்பாதை மாற்றி இணைப்பு வழங்க கோரியதாகவும், வீட்டுமனை உரிமையாளர் தன் வீடு மின் இணைப்பு பெறத்தான் பணம் கட்டி தங்களுக்கு வீட்டுமனை விற்பனை செய்கிறார், மின்சார வாரியம் மின்பாதையை மாற்றியமைக்க மதிப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொண்டு நான்கு வருடத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டு பத்து வருடம் கழித்து மின்பாதையை மாற்றியமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை, மின் இணைப்பு வழங்க இயலாது என கூறுவதை ஏற்க இயலவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மாற்றியமைக்க சாத்தியக் கூறுகள் இருந்ததாலே மதிப்பீட்டுத் தொகை பெற்றுள்ளதாகவும், மீண்டும் தற்கால மதிப்பீட்டின்படி மதிப்பீட்டுத் தொகை நிர்ணயித்துள்ளதாகவும், எனவே மின்பாதையை மாற்றியமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பது அப்பட்டமான பொய்யாகும் குறை தீர்ப்பு மையம் இவ்வாறு கூறுவது ஏற்கதக்கதல்ல, எனவே மின்குறைதீர்ப்பாளர் தனக்கு நியாயமான தீர்வை தரும்படி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் 06.01.2014 நாளன்று தனது குடியிருப்பு வீட்டு மனைக்கு மின் இணைப்பு கேட்டுள்ளதாகவும் இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை

என முறையீடு செய்தது தவறான தகவல் எனவும், மின் இணைப்பு கேட்டு பிரிவு அலுவலகத்தில் எந்த ஒரு விண்ணப்பமும் முறையீட்டாளர் பெயரில் பதிவு செய்யப்படவில்லை எனவும், தளுகை முருங்கப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 33/11 கிவோ துணை மின் நிலையத்திற்கு வரும் 33 KV உயரழுத்த மின்பாதையின் அடியில் மேல்முறையீட்டாளரின் வீட்டு மனை கந்தன் நகர் என்ற இடத்தில் உள்ளதாகவும், அந்த 33 கிவோ உயரழுத்த மின்பாதையின் அடியில் அமையப் பெற்றுள்ள இடத்தில் திரு.கு.நடராஜன், த/பெ கும்பசக்தி, கந்தன் நகர் (முறையீட்டாளரின் தகப்பனார்) வீடு கட்டுவதற்கான கட்டுமான பணிகளை ஆரம்பித்த போதே த.முருங்கப்பட்டி பிரிவு மின்சார வாரிய அலுவலரால் எச்சரிக்கை அறிவிப்பு கடிதம் 12.12.2013 நாளன்று 33 கிவோ உயரழுத்த மின்பாதைக்கு அடியில் வீடு கட்டினால் மின் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது, இது வாரிய விதிமுறைகளுக்கு முரணானது எனவும், மின் பாதையை மாற்றி அமைத்திட உரிய விண்ணப்பம் அளித்து அதற்குரிய மதிப்பீட்டு கட்டணம் செலுத்த ஒப்புதல் பெற்று கட்டுமான பணியை தொடரவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 33 கிவோ மின் பாதையை மாற்றி அமைத்திட கடந்த 25.02.2011 நாளது தேதியில் திரு.பழனிசாமி மற்றும் A. சக்திவேல், (முறையீட்டாளர்கள் கூற்றுப்படி வீட்டு மனை உரிமையாளர்கள்) ஆகியோர் மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தில் புல எண்: 491/2, 491/1 –ல் உள்ள 3.15 ஏக்கர் இடத்தை வாங்கி வீட்டுமனை அமைத்துள்ளதாகவும் அதன்மேல் செல்லும் 33 கிவோ மின் பாதையை மாற்றி அமைக்கவேண்டி அதற்குண்டான கட்டணத்தை செலுத்த சம்மதிக்கிறேன் என குறிப்பிட்டு விண்ணப்பம் செய்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதன் படி விண்ணப்பம் பதிவு எண்.026/10–11 நாள்: 01.03.2011 அன்று பதிவு செய்யப்பட்டு விண்ணப்பத்திற்கு மதிப்பீடு தயாரித்து உரிய அனுமதி பெறப்பட்டு விண்ணப்பதாரருக்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,23,110/– செலுத்திட கடிதம் வழங்கப்பட்டு Pr No: 791421 Dt:26.08.2011 மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், உரிய பணி ஆணை பெறப்பட்டு 33 KV மின் பாதை மாற்றி அமைக்க தளவாட பொருட்கள் பண்டக சாலையில் பெறப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மின் பாதையை மாற்றி அமைக்க மின் கம்பம் நடுவதற்கு 29.11.2011 அன்று ஒரு புறம் வீட்டு சர்வீஸ் ஒயர், மறுபுறம் 33 KV மின் பாதையை மாற்றி அமைத்தால் தடம்

போக்குவரத்துக்கு இடையூறு உண்டாகும் என ஆட்சேபணை கடிதம் கந்தன் நகர் பொதுமக்கள் என்கிற பெயரில் முருகன் மற்றும் 10 நபர்கள் கடிதம் மூலம் உதவி மின் பொறியாளர்/இகா/த.முருங்கப்பட்டி அவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும், திரு. முருகன் மற்றும் திரு.சுரேஷ் இருவருக்கும் க.எண்.இமிபொ/இகா/த.மு.பட்டி/வ.ஆ/கோ, DCW/எண்:229/11-12/நாள்:08.12.2011 அன்று மேற்படி 33 KV மின் பாதையை 20 அடி பாதைகள் 2 பக்கங்களிலும் மின் கம்பத்தை மாற்றி நடப்பட்டாலும் அதை எதிர் எதிர் அமையாது என்பதால் லாரி போக்குவரத்திற்கு இடையூராக இருக்காது எனவும், மின் பாதைகளை மாற்றி அமைப்பதால் ஏற்படுவதாக கூறும் பாதை அகலம் தொடர்பான பிரச்சனையை தாங்கள் மனுதாரர் திரு.பழனிசாமி மற்றும் ச.சக்திவேல் ஆகியோரிடம் தீர்வு கண்டுகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால் விண்ணப்பதாரர்கள் 23.11.2014-ல் ஆட்சேபணை தொடர்வதால் விண்ணப்பத்தை ரத்து செய்து கட்டிய தொகையை திரும்பி அளிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க மதிப்பீட்டு தொகை திருப்பி அளிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் கந்தன் நகர், தளுகை கிராமம் வீட்டுமனைகள் தற்போது முழு வளர்ச்சி பெற்று அதிகமான குடியிருப்புகள் உள்ளதாலும் 33 கி.வோ மின் பாதையை மாற்றி அமைத்திட வழித்தடம் தற்போதைய மதிப்பீட்டின் படியே அமைக்கப்படும் என்பதை மனுதாரர் தவறாக புரிந்துகொண்டு மன்றத்தில் புகார் செய்திருப்பது ஏற்றுக் கொள்ளும்படி இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின்பாதைக்கு கீழ் 5 அடி தூரத்தில் வீடு கட்டியுள்ளதாக முறையீட்டாளரே மன்றத்தில் அளித்த புகாரில் தெரிவித்திருக்கிறார். 5 அடி தூரத்தில் வீடு கட்டி முடிக்கப்பட்டிருப்பதால் அவருக்கு மின்பாதையை மாற்றி அமைத்தால் மட்டுமே விண்ணப்பம் பரிசீலிக்க இயலும் மற்றும் அதற்குடைய மதிப்பீட்டு கட்டணத்தை செலுத்தி மாற்று வழித்தடம் அமைத்தால் மட்டுமே அந்த இடத்தில் குடியிருப்பில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு என பலமுறை நேரில் எடுத்து கூறியும், எச்சரிக்கை கடிதம் அளிக்கப்பட்டும். முறையீட்டாளர் மின்பாதைக்கு அடியில் வீட்டை கட்டிக் கொண்டு வீட்டு மின் இணைப்பு வழங்கவில்லை என முறையீடு செய்வது எற்புடையது அல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் முறையீட்டாளரிடம் 33 KV உயரழுத்த மின்பாதையை Over Head இலிருந்து கேபிள் தடம் வழியாக செல்ல வழித்தடம் இருப்பின் அதனையும் ஆய்வு செய்து வழித்தடம் அமைக்க சாத்திய கூறுகள் இருப்பின் அதன்படி மதிப்பீடு செலுத்தி மின் பாதையை மாற்றியமைக்கலாம் என நேரில் அவரிடம் விளக்கம் அளிக்கப்பட்டது. அதன்படி முறையீட்டாளர் உரிய மதிப்பீட்டு கட்டணம் முழுவதும் செலுத்தினால் முறையீட்டாளரின் வீட்டு மனைக்கு மேல் செல்லும் உயரழுத்த 33 கி.வோ மின் பாதை மாற்றியமைக்கப்பட்டு கேபிள் வழியாக 33 கிவோ உயரழுத்த மின்பாதையை அமைத்து முறையீட்டாளரின் வீட்டு மனைக்கு மின் இணைப்பு வழங்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் 06.01.2014 அன்று தனது வீட்டிற்கு மின்னிணைப்பு கேட்டு மனு செய்து இதுவரை தனக்கு மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என்றும், 33 KW மின் பாதையை மாற்ற வேண்டி வீட்டுமனை உரிமையாளரிடம் மதிப்பீட்டு தொகையை பெற்றுக்கொண்டு நான்கு வருடத்தில் திருப்பி கொடுத்துவிட்டு, தற்பொழுது 10 வருடம் கழித்து மின்பாதையை மாற்றியமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை, மின்னிணைப்பு வழங்க இயலாது என எதிர்மனுதாரர்கள் கூறுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளரின் வாதுரையில் அவரது வீட்டிற்கும் 33 KV மின்பாதைக்கும் 5 அடி இடைவெளி இருப்பதாக தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் தளுகை, முருங்கப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 33/11 கிவே துணை மின் நிலையத்திற்கு வரும் 33KV உயரழுத்த மின்பாதையின் அடியில் அமையப்பெற்றுள்ள இடத்தில் மேல்முறையீட்டாளரின் தந்தை கட்டுமான பணிகளை ஆரம்பிக்கும்போதே அன்றைய தளுகை முருங்கப்பட்டி பிரிவு அலுவலரால் 33KV உயரழுத்த மின்பாதைக்கு அடியில் வீடு கட்டினால் மின்

விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டு, மின்பாதையை மாற்றியமைத்திட விண்ணப்பம் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.4 மேலும் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டது போல் 25.02.2011 அன்று திரு பழனிசாமி மற்றும் A. சக்திவேல் ஆகியோர் புல எண் 491/2, 491/1–இல் உள்ள 3.05 ஏக்கர் இடத்தை வாங்கி வீட்டுமனை அமைத்துள்ளதாகவும், அதன்மேல் செல்லும் 33 கிவோ மின்பாதையை மாற்றியமைக்க வேண்டி விண்ணப்பம் அளித்து அதற்குண்டான தொகையை செலுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் தொடர்ச்சியான ஆட்சேபனையால் 23.11.2014–இல் விண்ணப்பத்தை ரத்து செய்து கட்டிய தொகையை திரும்ப அளிக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க மதிப்பீட்டு தொகை திருப்பி அளிக்கப்பட்டு விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 தற்பொழுது கந்தன் நகர், தளுகை கிராமம் வீட்டுமனைகள் முழு வளர்ச்சி பெற்று அதிகமான குடியிருப்புகள் உள்ளதால், மேல்முறையீட்டாளரிடம் 33 KV உயரழுத்த மின்பாதையை OH–லிருந்து கேபிள் தடம் வழியாக செல்ல வழித்தடம் இருப்பின் அதனையும் ஆய்வு செய்து வழித்தடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பின் அதன்படி மதிப்பீடு செலுத்தி மின்பாதையை மாற்றியமைக்கலாம் என மேல்முறையீட்டாளரிடம் நேரில் விளக்கம் அளிக்கப்பட்டதாகவும், அதன்படி மதிப்பீடு செலுத்தி மின்பாதையை மாற்றியமைக்கலாம் என மேல்முறையீட்டாளரிடம் நேரில் விளக்கம் அளிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். அதன்படி மேல்முறையீட்டாளர் உரிய மதிப்பீட்டு கட்டணம் செலுத்தினால் 33 KV உயரழுத்த மின்பாதையை புதைவடமாக மாற்றியமைத்து மேல்முறையீட்டாளரின் வீட்டு மனைக்கு மின்னிணைப்பு வழங்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேற்கண்ட பத்திகளில் உள்ள வாதங்களின்படி மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் கட்டிடத்திற்கும் அக்கட்டிடத்திற்கு மேல் செல்லும் 33kv உயரழுத்த மின்பாதைக்கும் செங்குத்து இடைவெளி 5 அடிகள்தான் என அறியப்படுகிறது. ஆனால் CEA (Measure relating to safety and electric supply) Regulation, 2010 விதி எண் 61(2)(ii)–இன்படி 650 வோல்டிற்கு மேல் 33000 வோல்ட் வரை உள்ள மின்பாதை ஒரு கட்டிடத்திற்கு மேலே சென்றால், அந்த கட்டிடத்தின் அதிகபட்ச

உயரத்திற்கும், மின்பாதையின் அதிகம் தொய்வான மின் கடத்திக்கும் இடையில் உள்ள செங்குத்து தூரம் 3.7 மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும். எனவே, மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மேலே சென்றும் 33KV உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்க மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் அளித்து அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தினால் மட்டுமே உயரழுத்த மின்பாதையை மாற்றியமைத்து மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாகவே உள்ளது.

7.7 மேலும் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6)–இன்படி மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்கவேண்டும் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் என்றும் மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிகிறது. அவ்வாறு அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றுப்பணி தொடங்கப்படும் என்றும் தெரிகிறது. அந்த மதிப்பீட்டின்படி 1 (i) முதல் (vii) வரை உறுப்பினங்களை உள்ளடங்கிய பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிகிறது.

7.8 மேலும் மதிப்பீட்டின்படி வேலை முடிவடைந்தவுடன் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ஏற்றிக்கொண்டு சென்று இறக்குதல், கட்டுமான செலவு ஆகியவற்றை உள்ளடக்கி, மறு மதிப்பீடு செய்து அதன் நகல் மின் நுகர்வோருக்கு அளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால் மீதி தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோருக்கு மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படவேண்டுமென்றும், ஆனால் முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால் வேறுபாட்டுத்தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யப்படுதல் வேண்டும் என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

7.9 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6)–ன்படி விண்ணப்பம் அளித்து அவரின் வீட்டிற்கு மேல் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கு தேவையான மதிப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது. 33 KV உயரழுத்த மின்பாதையை மாற்றியமைத்த பின் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும்

விண்ணப்பத்தை உடனடியாக பரிசீலிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் 33 KV உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்க கோரி விண்ணப்பித்து அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் நேர்வில் உடனடியாக அப்பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பணி செய்யும் போது எழக்கூடிய ஆட்சேபனை way leave போன்றவற்றை ஓர் நுகர்வோரே சரி செய்து தரவேண்டுமென்கிற மின்பகிர்மான விதி எண் 27(6) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Notification No. TNERC/DC/8-21 dated 07.10.2014-இன்படி நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே பணி செய்யும் போது எழக்கூடிய ஆட்சேபனையை எதிர்மனுதாரரே உரிய நடவடிக்கை எடுத்து சரிசெய்து அப்பணியை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தப்படுகிறது.

**8.0. <u>முடிவுரை:</u>**

**8.1** மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6)-ன்படி விண்ணப்பம் அளித்து அவரின் வீட்டிற்கு மேல் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கு தேவையான மதிப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது. 33 KV உயரழுத்த மின்பாதையை மாற்றியமைத்த பின் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்தை உடனடியாக பரிசீலிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட பத்தி 7ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.2** மேற்கண்ட தீர்வுடன், இந்த மேல்முறையீட்டு மனு எண் **14/2022** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:

1. திரு. N. சரவணன்,
S/o. நடராஜன்,
தளுகை முருங்கப்பட்டி அஞ்சல்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம் – 621 012.

2. செயற்பொறியாளர்/இ.கா./துறையூர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், திருச்சி மெயின் ரோடு,
துறையூர் தாலுக்கா – 621 010.

3. உதவி செயற்பொறியாளர்/இ.கா./கொப்பம்பட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், கொப்பம்பட்டி,
துறையூர் தாலுக்கா – 621 012.

4. உதவி பொறியாளர்/ இ.கா./முருங்கப்பட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/551 TNEB, முருங்கப்பட்டி,
துறையூர் தாலுக்கா – 621 012.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – 620 020.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.